**People's Watch**
No.6, Vallabai Road, Chokkikulam, Madurai - 625 002.
Phone: 0452-2531874 & 2539520 Fax: 0452 - 2531874
E.mail: info@pwtn.org Web: www.peopleswatch.org

09.09.11

மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள்
தமிழ்நாடு அரசு தலைமைச் செயலகம்
அண்ணாசாலை
சென்னை 60002

மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்கு

மக்கள் கண்காணிப்பகத்தின் இனிய வணக்கம்.

மதுரையைத் தலைமையிடமாகக் கொண்டு மக்கள் கண்காணிப்பகம் அமைப்பு கடந்த 16 ஆண்டுகளாக, தமிழக அளவிலும், 2006 முதல் இந்தியா முழுவதிலுமுள்ள 18 மாநிலங்களிலும், மனித உரிமைக் காப்புப் பணியில் சர்வதேச மனித உரிமை அமைப்புகளுடன் இணைந்து செயல்பட்டு வருகிறது.

எவ்வித அரசியல் கட்சி சார்புமின்றியும், தனி நபர் மீதான விருப்பு, வெறுப்புக்களைக் கடந்தும் மனித உரிமை அரங்கில் அரசைக் கண்காணித்து மனித உரிமைக் கலாச்சாரத்தை வளர்த்தெடுக்கும் விதமாக மனித உரிமைகளைக் காத்தல், வளர்த்தல், வாழ்நெறியாக்கல் என்ற முறையில் எங்களது பணி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. தமிழகத்தில் கடந்த 01.09.2011 முதல் 09.09.2011 முடிய எங்கள் அமைப்பின் கவனத்திற்கு வந்த மனித உரிமை மீறல் செய்திகளை உங்கள் கவனத்திற்குக் கொண்டு வருகிறோம்.

**01-09-2011 முதல் 09-09-2011 முடிய இவ்வாரத்தில் எங்கள் கவனத்திற்கு வந்த மனித உரிமை மீறல் செய்திகள்**

| | | |
|---|---|---|
| 1. | என்கவுண்டர்/காவல் மரணம் | 1 |
| 2. | சிறைக் கைதி மரணம் / வன்முறை | 1 |
| 3. | பெண்கள் மீதான வன்முறை | 28 |
| 4. | காவல் நிலையச் சித்திரவதை | 6 |
| 5. | வகுப்பறை வன்முறை | 5 |
| 6. | தலித்துகள் மீதான வன்முறை | 3 |
| 7. | அரசு அதிகாரிகள் / காவல் துறையினர் லஞ்சம் பெற்றது. | 4 |
| 8. | மருத்துவர்கள் அலட்சியம் | – |
| 9. | கொத்தடிமை | – |
| 10. | பெண் சிசு கொலை | 1 |
| 11. | குழந்தை திருமணம் | 1 |
| 12. | குழந்தை தொழிலாளர் மீட்பு/ வன்முறை | 10 |
| 13. | மீனவர்கள் மீது தாக்குதல் | – |
| 14. | கந்து வட்டிக் கொடுமை | – |
| 15. | கட்டப்பஞ்சாயத்து / சமூகப் புறக்கணிப்பு | – |
| 16. | ரேசன் அரிசி கடத்தல் | 2 |
| 17. | மணல் கொள்ளை | 2 |
| 18. | திருநங்கைகள் மீதான வன்முறை | – |
| 19. | பழங்குடியினர் மீதான வன்முறை | – |

மக்கள் கண்காணிப்பகம்

| | | |
|---|---|---|
| 20. | முதியவர்கள் மீதான வன்முறை | 2 |
| 21. | மாற்றுத்திறனாளர்கள் மீதான வன்முறை | – |
| 22. | பொதுவானவை | – |
| | மொத்தம் | **66** |

மேற்கண்ட சம்பவங்களில் தாங்கள் உடனடியாகத் தலையிட்டு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ள அன்புடன் வேண்டுகிறோம்.

இதுபோன்ற காவல் மரணங்களும், சித்திரவதைகளும் தொடர்ந்து நிகழா வண்ணம் தடுக்க ஆவன செய்ய வேண்டுகிறோம்.

நன்றி,

நம்பிக்கையுடன் மனித உரிமைப் பணியில்

**(ஹென்றி டிபேன்)**
நிர்வாக இயக்குநர்

**நகல்கள்:**

தமிழகத் தலைமை நிலையச் செயலாளர் மற்றும் உயரதிகாரிகள்

அனைத்து மாவட்ட ஆட்சியாளர்கள்

தமிழகக் காவல்துறைத் தலைவர் மற்றும் உயரதிகாரிகள்

அனைத்து மாவட்டக் காவல்துறைக் கண்காணிப்பாளர்கள்

அனைத்து மனித உரிமை ஆணையங்கள்

அனைத்து அரசியல் கட்சிகள்

மக்கள் கண்காணிப்பகம்

# தமிழகத்தில் மனித உரிமை மீறல்கள் - தொகுப்பு-34
## 01.09.2011 முதல் 09.09.2011 முடிய

| வ. எண் | செய்தி கிடைத்த நாள் | மாவட்டம் / பெயர் விபரம் மற்றும் சம்பவ விபரம் | பிரிவு | தகவல் பெற்றது. |
|---|---|---|---|---|
| 2212. | 01.09.2011 | **மதுரை மாவட்டம்:** திருமங்கலம் அருகே உள்ள அ.தொட்டியபட்டியைச் சேர்ந்த சோலைமலை மனைவி சங்கரம்மாள்(45). வீட்டில் இரவு தூங்கிக் கொண்டிருந்த சங்கரம்மாள் மர்ம நபர்களால் கொலை. | பெண்கள் மீதான வன்முறை & கொலை | தினமணி |
| 2213. | 01.09.2011 | **தருமபுரி மாவட்டம்:** அரூர் அரசு மேல்நிலைப்பள்ளியில் 11ம் வகுப்பு படிக்கும் மாணவி சத்தியா. இவரது தாய், தந்தை கோபலான், லட்சுமி. கட்டிடப் பணி செய்துவரும் இவர்கள் சத்தியாவுக்கு தீருமணம் செய்ய முயற்சி. அரசு அதிகாரிகள் சத்தியாவை மீட்டனர். | குழந்தைத் திருமணம் | டெக்கான் கிரானிக்கல் |
| 2214. | 01.09.2011 | **சென்னை மாவட்டம்:** போரூர் பகுதியைச் சேர்ந்த முத்து மகன் சந்திரபாபு. தனது பட்டா பெயர் மாற்றம் செய்ய அனைத்து ஆவணங்களும் சரியாக இருந்தும் வட்டாட்சியர் மீனாட்சி ரூபாய் 4.,000 ரூபாய் லஞ்சம் கேட்டதாக புகார். | லஞ்சம் | தினமலர் |
| 2215. | 01.09.2011 | **தேனி மாவட்டம்:** வீரபாண்டியைச் சேர்ந்த மதுரையம்மாள்(65). தனது மூன்று பேரக்குழந்தைகளுடன் சென்ற ரேசன் கார்டு கேட்டு பலமுறை மனு கொடுத்துள்ளார். ரம்ஜான் என்று தெரிந்தும் தாலுகா அலுவலக ஊழியர்கள் கலெக்டர் அலுவலகம் செல்லுமாறு கூறிய மதுரையம்மாளை அலைக்கழித்ததாகப் புகார். | முதியவர்கள் மீதான வன்முறை | தினமலர் |
| 2216. | 01.09.2011 | **மதுரை மாவட்டம்:** கப்பலூரில் அரசு கள்ளர் உயர்நிலைப்பள்ளியில் 8ம் வகுப்பு படிக்கும் மாணவர்கள் சுரேஷ்குமார், பரமேஸ்வரி, சதீஷ்குமார், கார்த்திக், சரண்யா, இவர்கள் அனைவரும் பெற்றோர் நடத்தையால் மனமுடைந்து வீட்டிற்கு செல்லாமல் கோயமுத்தூர் சென்ற குழந்தைகள் மீட்கப்பட்டு டான்பாஸ்கோ ஏழைகள் இல்லத்தில் தங்கவைக்கப்பட்டுள்ளனர். | குழந்தைகள் மீதான வன்முறை | தினகரன் |
| 2217. | 01.09.2011 | **மதுரை மாவட்டம்:** சமயநல்லூர் அருகே உள்ள தேனூர் வைகையாற்று படுகையில், அனுமதியின்றி மணல் திருடிய தண்டியப்பன், விஜயக்குமார் கைது, இரு மாட்டுவண்டிகள் பறிமுதல். | மணல் கொள்ளை | தினகரன் |

| | | | | |
|---|---|---|---|---|
| 2218. | 01.09.2011 | **மதுரை மாவட்டம்:** மகபூப்பாளையத்தைச் சேர்ந்த ராஜன் மகள் அருணாதேவி(27). சொட்டதட்டி பகுதியைச் சேர்ந்த ஒருவர் அருணாதேவியை கடத்திச் சென்றதாக புகார். | பெண்கள் மீதான வன்முறை& கடத்தல் | தினகரன் |
| 2219. | 01.09.2011 | **விழுப்புரம் மாவட்டம்:** திருக்கோவிலூர் அடுத்துள்ள வீரபாண்டி கிராம பகுதியில் தலைமறைவாக இருந்துவரும் சாராய வியபாரிகளைப் பிடிப்பதற்குச் சென்ற காவலர்கள் அவர்களைப் பிடிப்பதற்காக நேரு(13) வை அணுகினார். காவலர்களுக்கு பயந்து ஓடிய சிறுவன் படுகாயம். | குழந்தைகள் மீதான வன்முறை & காவல் நிலையச் சித்திரவதை | தினகரன் |
| 2220. | 01.09.2011 | **திண்டுக்கல் மாவட்டம்:** பழநி கல்லறைத்தோட்டம் பகுதியைச் சேர்ந்த செபாஸ்டின் மனைவி சேசம்மாள்(80). சேசம்மாள் மகன் உபகாரன். இருவருக்கும் நடந்த தகராறில் ஆத்திரமடைந்த உபகாரன் சேசம்மாளை கத்தியால் குத்திக் கொலை செய்ததாக கைது. | முதியவர்கள் மீதான வன்முறை & கொலை | தினகரன் |
| 2221. | 01.09.2011 | **திண்டுக்கல் மாவட்டம்:** வத்தலக்குண்டு அருகே உள்ள பண்ணைக்காட்டைச் சேர்ந்த நிவாசினி(24) தேனியில் கல்லூரியில் பேராசிரியராக வேலை செய்கிறார். பேருந்து நிறுத்தத்தில் நின்றுக் கொண்டிருந்த நிவாசினியை காரில் வந்த மர்ம நபர்கள் கடத்திச் சென்றதாக புகார். பண்ணைக்காடு தீருமலைராஜன், புவனேஸ்வரி, கோபீஸ்வரி, சித்ரா 4 பேர் கைது. | பெண்கள் மீதான வன்முறை & கடத்தல் | தினகரன் |
| 2222. | 02.09.2011 | **சிவகங்கை மாவட்டம்:** சிவகங்கை ஆதிதிரவிடர் மற்றும் பழங்குடியினருக்கு ஒதுக்கப்பட்ட நிலங்களை சட்டத்துக்கு புறம்பாகவும், விதிகளை மீறியும் கணேசன் என்பவரிடம் இருந்து காரைக்குடி அ.தி.மு.க., எம்.எல்.ஏ., சோழன் சித. பழனிச்சாமி இருவரும் பறித்ததாகவும் அவர்கள் மீது காவல்துறையில் புகார் கொடுத்தவர்களைக் கொலை மிரட்டல் விடுத்ததாவும், அவர்கள் மீது நடவடிக்கை எடுக்ககோரி மதுரை உயர்நீதிமன்றத்தில் மனு. | தலித்துகள் மீதான வன்முறை | தினகரன் |
| 2223. | 02.09.2011 | **மதுரை மாவட்டம்:** தென்பரங்குன்றத் தைச் சேர்ந்த விருமாண்டி மகள் மணிமேகலை(19). வீட்டில் தனியாக இருந்த மணிமேகலையை அதே பகுதியைச் சேர்ந்த குண்டுமணி, கொடி, பரமேஸ்வரன், உள்ளட 8 பேர் தாக்கியதோடு அவரது 3 பவுன் நகையை பறித்துச் சென்றதாக புகார். | பெண்கள் மீதான வன்முறை | தினகரன் |
| 2224. | 02.09.2011 | **சேலம் மாவட்டம்:** ஓமலூரைச் சேர்ந்த லட்சுமி இதய பாதிப்பு எற்பட்டு சேலம் அரசு | பெண்கள் மீதான | தினமலர் |

மக்கள் கண்காணிப்பகம்

| | | | | |
|---|---|---|---|---|
| | | மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பலனின்றி மரணம். பிரேத பரிசோதனையில் போது அவரது கழுத்தில் இருந்த 4 பவுன் நகையை மருத்துவமனை பணியாளர்கள் திருடியதாக புகார். | வன்முறை | |
| 2225. | 02.09.2011 | **கோவை மாவட்டம்:** பொள்ளாச்சி அடுத்த கொள்ளுப்பாளையம், எம்.ஜி.ஆர். நகர் நரிக்குறவர் காலனியைச் சேர்ந்த நரிக்குறவர் காலனியைச் சேர்ந்த இளைஞர்கள் கவுண்டமணி மாஜிம்(22), மோகன்காசிராஜா (24), ஒக்கினோவா சோரின் ரியூகராத்தே டோ இந்தியா என்ற பயிற்சியில் தேர்ச்சிப்பெற்ற மாணவர்கள் மலேசியாவில் நடக்கும் சர்வதேச கராத்தே போட்டியில் கலந்துக் கொள்ள வாய்ப்பு கிடைத்தும், பாஸ்போர்ட் கிடைக்காததால் மாணவர்கள் புகார். | தலித்துகள் மீதான வன்முறை | தினமலர் |
| 2226. | 03.09.2011 | **சேலம் மாவட்டம்:** உளுந்தூர்பேட்டை அடுத்த எறையூர் கிராமத்தைச் சேர்ந்த சவுமியா(11). தனியார் பள்ளியில் 6ம் வகுப்பு படிக்கும் சவுமியாவை எறையூர் புதுகாலனியைச் சேர்ந்த சவுரிமுத்து(60) பாலியல் பலாத்காரம். சவுரிமுத்து கைது. | குழந்தைகள் மீதான பாலியல் வன்முறை | தினமலர் |
| 2227. | 03.09.2011 | **தூத்துக்குடி மாவட்டம்:** உடன்குடி அடுத்த சீர்காட்சியைச் சேர்ந்த ஆதிலிங்கம் (எ) பாஸ்கர் மனைவி பிரபாவதி(24). திருமணம் நடந்த ஐந்து நாட்களில் இருவரும் பிரிந்தனர். இந்நிலையில் பாஸ்கர் வேறொரு பெண்ணை இரண்டாவது திருமணம் செய்ய முயன்றதாக பிரபாவதி புகார். | பெண்கள் மீதான வன்முறை | தினமலர் |
| 2228. | 03.09.2011 | **தேனி மாவட்டம்:** ஆண்டிபட்டி அருகே கோயில்பட்டியைச் சேர்ந்த கருப்பையா மகள் ஜெயப்பிரதா(20). வேலைக்குச் சென்ற ஜெயப்பிரதாவை காணவில்லை எனப் புகார். இந்நிலையில் ஜெயப்பிரதா மதுரை காமராஜர் பல்கலை கல்லூரி பின்புறம் கழுத்தை இறுக்கி கொலை செய்யப்பட்டு இறந்து கிடந்ததாக புகார். | பெண்கள் மீதான வன்முறை & கொலை | தினமலர் |
| 2229. | 03.09.2011 | **மதுரை மாவட்டம்:** வாடிப்பட்டி பேருந்து நிலையம் அருகே மயங்கிக் கிடந்த கர்ப்பிணி பெண் அரசு மருத்துவமனையில் சிகிச்சை பலனின்றி மரணம். விசாரணையில் சமயநல்லூர் அருகே தேனூர் கிராமத்தைச் சேர்ந்த செல்வம் மனைவி முனியம்மாள் என தகவல். | பெண்கள் மீதான வன்முறை | தினகரன் |
| 2230. | 03.09.2011 | **மதுரை மாவட்டம்:** நாகமலை புதுக்கோட்டை அருகேயுள்ள ஆலம்பட்டியைச் சேர்ந்த பிச்சைமணி மகள் | பெண்கள் மீதான வன்முறை | தினகரன் |



மக்கள் கண்காணிப்பகம்

| | | | | |
|---|---|---|---|---|
| | | ரம்யா(18). ரம்யாவை வடபழனியைச் சேர்ந்த சுரேஷ், கடத்திச் சென்றதாக புகார். | & கடத்தல் | |
| 2231. | 03.09.2011 | **இராமநாதபுரம் மாவட்டம்:** பரமக்குடி அருகே உள்ள பூவலந்தான் கிராமத்தைச் சேர்ந்த முத்து மனைவி செய்யதம்மாள்(60) பரமக்குடி சந்தைக்குச் சென்ற செய்யதம்மாளின் 41/2 பவுன் நகையை பறித்துச் சென்றதாக புகார். | பெண்கள் மீதான வன்முறை | தினகரன் |
| 2232. | 03.09.2011 | **இராமநாதபுரம் மாவட்டம்:** உடையார்நாதபுரத்தைச் சேர்ந்த தவசி மனைவி குருத்தாயி(55). பரமக்குடி சந்தைக்கு வந்த குருத்தாயின் நான்கேமுக்கால் பவுன் நகையைப் பறித்துச் சென்றதாக புகார். | பெண்கள் மீதான வன்முறை | தினகரன் |
| 2233. | 03.09.2011 | **கடலூர் மாவட்டம்:** வேப்பூர் அடுத்த சேப்பாக்கம் கிராமத்தைச் சேர்ந்த முருகேசன் மகன் ராஜதுரை(16). வகுப்பறையில் மின் கோளாறு ஏற்பட்டது. வகுப்பாசிரியர் மின் கோளாறை சரி செய்யும்படி கூறினார். சரி செய்ய முயன்ற ராஜதுரை மின்சாம் தாக்கி மரணம். ஆசிரியர் மீது நடவடிக்கை எடுக்க வலியுறுத்தி மாணவ, மாணவியர் சாலை மறியல். | வகுப்பறை வன்முறை | தினகரன் |
| 2234. | 03.09.2011 | **சென்னை மாவட்டம்:** சென்னை டி.பி.சத்திரம் பிளாக்கைச் சேர்ந்த மோகன் மகன் ராகுல்(14). புரசைவாக்கம் நெடுஞ்சாலையில் உள்ள இஎல்எம் மேல்நிலைப்பள்ளியில் 10ம் வகுப்பு படிக்கும் மாணவன். வகுப்பாசிரியையின் செல்போன் தொலைந்ததால் ஆத்திரமடைந்த நித்யா மற்ற மாணவர்கள் முன்னிலையில் மாணவன் ராகுலை நிர்வாணமாக்கி அடித்து உதைத்ததால் மனமுடைந்த மாணவன் விஷம் குடித்துத் தற்கொலை. பொதுமக்கள் சாலை மறியல். | வகுப்பறை வன்முறை | தினகரன் |
| 2235. | 03.09.2011 | **விருதுநகர் மாவட்டம்:** சிவகாசி அருகே கமலநாச்சியார்புரம் வடக்குத் தெருவைச் சேர்ந்த ரமேஷ்பாண்டியன்(46) மகன் கோடீஸ்வரன்(15). தங்கலில் உள்ள கலைமைகள் மேல்நிலைப்பள்ளியில் 10ம் வகுப்பு படிக்கும் மாணவன். பள்ளிக்குச் சென்ற கோடீஸ்வரனை மர்ம நபர்கள் கடத்திச் சென்று ரூபாய் 25 லட்சம் கேட்டு மிரட்டல். | குழந்தைகள் மீதான வன்முறை & கடத்தல் | தினகரன் |
| 2236. | 03.09.2011 | **மதுரை மாவட்டம்:** அலங்காநல்லூர் பகுதியில் அதிகாரிகன் சோதனையின் போது அங்குள்ள ஓடையில் அனுமதியின்றி டிராக்டரில் மணல் அள்ளிய சுந்தர்(22), | மணல் கொள்ளை | தினகரன் |



மக்கள் கண்காணிப்பகம்

| | | | | |
|---|---|---|---|---|
| | | ராஜாக்காபட்டி காத்திக்குமார்(21), பாலமேடு ஜெயபாலன்(23) கைது. 3 டிராக்டர் பறிமுதல். | | |
| 2237. | 04.09.2011 | **கோவை மாவட்டம்:** கோவை மேட்டுப்பாளையம் தாலுகா கோவனூர் கிராமத்தில் வசிக்கும் ஐஸ் வியாபாரி குப்புசாமி. காவலர்கள் குப்புசாமி மீது பொய் வழக்குப்போட்டு காவல் நிலையத்தில் வைத்துச் சித்திரவதை செய்து கொலை. | காவல் நிலைய மரணம் | சன்நியூஸ் |
| 2238. | 04.09.2011 | **மதுரை மாவட்டம்:** தெப்பக்குளம் போலீஸ் சரகம், புதுராமநாதபுரம் சாலை பகுதியில் வசிக்கும் கடேஷ்குமார் மனவை ஸ்டெல்லாமேரி(30). கணவன் மனைவி குடும்பத் தகராறில் ஆத்திரமடைந்த கடேஷ்குமார் ஸ்டெல்லாமேரியை கத்தியால் குத்திக் கொலை செய்ததாகப் புகார். | பெண்கள் மீதான வன்முறை & கொலை | தினமணி |
| 2239. | 04.09.2011 | **இராமநாதபுரம் மாவட்டம்:** ராமநாதபுரத்தில் மாலை விநாயகர் சதுர்த்தி ஊர்வலத்தில் இளைஞர்கள் மெதுவாகச் சென்றதால் போக்குவரத்துத் தடை. மாட்டு வண்டிகளுடன் அதிக நேரம் நின்றதால் காவலர்கள் தடியடி. | காவல் நிலையச் சித்திரவதை | தினமலர் |
| 2240. | 04.09.2011 | **இராமநாதபுரம் மாவட்டம்:** தொண்டி அருகே மோர்பண்ணை கிராமத்தைச் சேர்ந்த 17 வயது பெண். வீட்டிற்கு புன்புறம் சிறுநீர்கழிப்பதற்காகச் சென்ற பெண்ணை அதே கிராமத்தைச் சேர்ந்த மீனவர்கள் சின்னத்தம்பி, நாகூர்கனி, காளிக்கனி, அப்பெண்ணை பாலியல் பலாத்காரம். | பெண்கள் மீதான பாலியல் வன்முறை | தினமலர் |
| 2241. | 04.09.2011 | **மதுரை மாவட்டம்:** திருமங்கலத்தை அடுத்த கள்ளிக்குடி மேலப்பட்டி காலனியைச் சேர்ந்த முத்துமாரி(24) மனைவி சந்தனமாரி(21) . சந்தனமாரி தனது 21/2 வயது குழந்தையுடன் காணவில்லை என முத்துமாரி புகார். | பெண்கள் மீதான வன்முறை | தினத்தந்தி |
| 2242. | 04.09.2011 | **நெல்லை மாவட்டம்:** பாபநாசம் தாலுகா பூண்டி கிராமம் தெற்கு தெருவைச் சேர்ந்த கிருஷ்ணனின் மகள் ராதா(22), அதே பகுதியைச் சேர்ந்த சுரேஷ்(24), இருவரும் காதலித்துத்தனர். சுரேஷ் திருமணம் செய்வதாகக் கூறி ஏமாற்றியதாக ராதா புகார். காதலன் வீட்டு முன்பு ராதா போராட்டம் | பெண்கள் மீதான வன்முறை | தினத்தந்தி |
| 2243. | 04.09.2011 | **மதுரை மாவட்டம்:** திருமங்கலத்தை அடுத்த உச்சபட்டி அகதி முகாமில் குடியிருப்பவர் பாபு மனைவி கேதீஸ்வரி(35) மகள் ஸ்டெல்லாமேரி(17). அதே முகாமில் குடியிருந்த நிரோசன்(21) ஸ்டெல்லாமேரியை திருமணம் செய்துக் கொள்வதாக ஆசை | பெண்கள் மீதான வன்முறை & கடத்தல் | தினத்தந்தி |

மக்கள் கண்காணிப்பகம்

| | | | | |
|---|---|---|---|---|
| | | வார்த்தைக் கூறி கடத்திச் சென்றதாக புகார். | | |
| 2244. | 04.09.2011 | **பெரம்பலூர் மாவட்டம்:** பெரம்பலூர் பேராளி என்ற கிராமத்தில் வசிக்கும் தலித் மக்கள். உயர் சாதியினர் வசிக்கும் தெருவில் சைக்கிள் ஓட்டக்கூடாது, சைக்கிளிள் இருந்து இறங்கி நடந்துச் செல்லவேண்டும் என உயர்சாதியினர் தடைவிதித்துள்ளதாக தலித் மக்கள் புகார். | தலித்துகள் மீதான வன்முறை | மாலைமுரசு |
| 2245. | 04.09.2011 | **மதுரை மாவட்டம்:** பழங்காநத்தம் திருவள்ளுவர் நகரைச் சேர்ந்த அழகுராஜா மனைவி பொன்மாரி(31), 6 மாத கர்ப்பிணியான பொன்மாரியை கணவர் மற்றும் குடும்பத்தார் கூடுதல் வரதட்சணை கேட்டுத் துன்புறுத்தியதால் மனமுடைந்த பொன்மாரி தூக்கிட்டுத் தற்கொலை. | பெண்கள் மீதான வன்முறை & வரதட்சணைக் கொடுமை & தற்கொலை | தினகரன் |
| 2246. | 04.09.2011 | **மதுரை மாவட்டம்:** புதுமீனாட்சி நகரைச் சேர்ந்த வெங்கடேஷ்குமார் மனைவி ஸ்டெல்லாமேரி(29). குடிப்பழக்கத்தால் கணவன் மனைவி குடும்பத் தகராறில் ஆத்திரமடைந்த வெங்டேஷ்குமார் ஸ்டெல்லாமேரியை கழுத்தை நெறித்துக் கொலை. வெங்கடேஷ்குமார் கைது. | பெண்கள் மீதான வன்முறை & கொலை | தினகரன் |
| 2247. | 04.09.2011 | **சேலம் மாவட்டம்:** சேலம் அம்மாபேட்டையைச் சேர்ந்த ராணி(25). கிச்சிபாளையத்தைச் சேர்ந்த சந்திரன்(17) அரசு பள்ளியில் பிளஸ் 2 படிக்கும் மாணவன் ராணிக்கு செல் போன் மூலம் ஆபாச எஸ்.எம்.எஸ் அனுப்பியதோடு, ஆபாசமாக பேசியதாக புகார். | பெண்கள் மீதான வன்முறை | தினகரன் |
| 2248. | 05.09.2011 | **மதுரை மாவட்டம்:** பொள்ளாச்சி பகுதியைச் சேர்ந்த கனகா(23). காரியப்பாட்டியைச் சேர்ந்த பாண்டியன். இருவரும் காதலித்தனர். பாண்டியனின் பெற்றோர் திருமணத்திற்கு எதிர்ப்பு. பாண்டியன் மாட்டுத்தாவணி பேருந்துநிலையத்தில் கனகாவை ஏமாற்றி விட்டுச் சென்றதாக புகார். | பெண்கள் மீதான வன்முறை | தினத்தந்தி |
| 2249. | 05.09.2011 | **சிவகங்கை மாவட்டம்:** மானாமதுரைஅருகே உடையகுளத்தைச் சேர்ந்த முத்துப்பாண்டி மகன் முத்துசெல்வம்(6), சரவணக்குமார் மகன்கள் சக்திவேல்(12), ஜெகன்(5), ரகு மகன் கிஷோர்(8). வீட்டருகே விளையாடிக் கொண்டிருந்த குழந்தைகளை இராமநாதபுரம் எம்.எஸ்.கே நகரைச் சேர்ந்த சரவணன்(36) ராமேஸ்வரம் சென்னை ரயிலில் கடத்த முயற்சி. மாணவர்கள் காவலர்களால் மீட்பு. | குழந்தைகள் மீதான வன்முறை & கடத்தல் | தினமலர் |

மக்கள் கண்காணிப்பகம்

| | | | | |
|---|---|---|---|---|
| 2250. | 05.09.2011 | **கடலூர் மாவட்டம்:** விருத்தாசலம் காவல் நிலைய சட்ட ஒழுங்கு சப்–இன்ஸ்பெக்டர் வனஜா அரசு பேருந்து மூலம் கடலூரில் இருந்து விருத்தாசலம் வந்தார். விருத்தாசலம் அருகே உள்ள காவல் நிலையத்தில் பேருந்தை நிறுத்துமாறு கூறினார். காவல் நிலையம் அருகே பேருந்து நிற்காமல் சென்றதால் ஆத்திரமடைந்த வனஜா கண்டக்டர் பாலமுருகன்(20)னை திட்டியதோடு கடுமையாகத் தாக்கியுள்ளார். பேருந்து ஊழியர்கள் போராட்டம். | காவல் நிலையச் சித்திரவதை | தினகரன் |
| 2251. | 05.09.2011 | **வேலூர் மாவட்டம்:** வேலூரை அடுத்த கொணவட்டம், மற்றும் முள்ளிப்பாளையம் இருந்து விநாயகர் சிலைகளை சதுப்பேரி எரியில் கரைப்பதற்கு சென்றபோது மேளம் அடிக்ககூடாது என ஒரு தரப்பினர் கூறியதால் இரு தரப்பினர் இடையே மோதல். காவல் துறையினர் தடியடி. | காவல் நிலையச் சித்திரவதை | தீக்கதிர் |
| 2252. | 06.09.2011 | **மதுரை மாவட்டம்:** கொன்னவாயன் சாலையைச் சேர்ந்த முத்துராஜ் அரிசி கடை நடத்தி வந்தார். இரவு கடையை அடைத்து மறுநாள் திறக்கும்போது அவரது கடையில் இருந்து 25 கிலோ எடைகொண்ட 40 மூட்டை அரிசி திருடப்பட்டுள்ளதாக புகார். | அரிசி கடத்தல் | தினத்தந்தி |
| 2253. | 06.09.2011 | **நெல்லை மாவட்டம்:** அம்பாசமுத்திரத் தைச் சேர்ந்த கண்ணபிரான்(35) இவர் திருவண்ணாமலை செய்யாறு தாலுகாவில் உள்ள உயர்நிலைப்பள்ளி ஆசிரியர். இரண்டு மனைவிகள் உள்ள நிலையில் அப்பள்ளியில் படிக்கும் 13 வயது மாணவியை மிரட்டி கடத்திச் சென்று கட்டாய தாலி கட்டியதாக ஆசிரியர் கண்ணாபிரன் மீது புகார். | வகுப்பறை வன்முறை & குழந்தைகள் மீதான வன்முறை | தினத்தந்தி |
| 2254. | 07.09.2011 | **வேலூர் மாவட்டம்:** ஆற்காடு நபிஷா நகரைச் சேர்ந்த ரமேஷ்குமார் மனைவி உஷாராணி(35). கணவன் மனைவி இருவரும் இருசக்கர வாகனத்தில் வேலூருக்கு சென்று ஆற்காடு திரும்பும் வழியில் பின்னால் இருசக்கர வாகனத்தில் வந்த மர்ம நபர்கள் உஷாராணியை அரிவாளால் வெட்டிக் கொலை. | பெண்கள் மீதான வன்முறை & கொலை | தினத்தந்தி |
| 2255. | 07.09.2011 | **மதுரை மாவட்டம்:** திருமங்கலத்தில் உள்ளே கீழப்பள்ளிவாசலில் பதுக்கி வைக்கப்பட்ட 40 மூட்டை ரேசன் அரிசி பறிமுதல். முகமது ரபீக், ஜான், உசேன் 3 பேர் கைது. | ரேசன் அரிசி கடத்தல் | தினகரன் |
| 2256. | 07.09.2011 | **தஞ்சை மாவட்டம்:** கும்பகோணம் அருகே கோவிந்தபுரம் அக்ராஹாரத்தைச் சேர்ந்த பார்த்தசாரதி(49). தனது தாயார் தனக்கு செட்டில்மென்டாக | லஞ்சம் | தினமலர் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | எழுதிக்கொடுத்த இடத்திற்கு தனது பெயருக்கு பட்டா கோரி தாலுகா அலுவலகத்தில் மனு. வி.ஏ.ஓ., ரவிக்குமார்(55) பட்டா மாற்றத்திற்கு ரூபாய் 4000 லஞ்சம் கேட்டதாக பார்த்தசாரதி புகார். | | |
| 2257. | 07.09.2011 | **திருச்சி மாவட்டம்:** திருச்சி மத்திய சிறையில் கைதிகளுக்கு பீமாநகர் டி.எம்.ஐ., என்ற தொண்டு நிறுவனம் கேட்டரிங் பயிற்சி கொடுத்தது. கேட்டரிங் பாடம் நடத்திய கன்னியாஸ்திரி ஜோஸ்வாமேரியை ஆயுள் தண்டனை கைதி ராஜேஷ்(40) கத்தரிக்கோலால் கழுத்தை அறுத்துக் கொலை செய்ய முயற்சி. | பெண்கள் மீதான வன்முறை & கொலை முயற்சி & சிறைச்சாலை வன்முறை | தினமலர் |
| 2258. | 07.09.2011 | **நெல்லை மாவட்டம்:** நெல்லை வள்ளியூரை அடுத்துள்ள சின்னம்மாள்புரத்தில் கிரெயில் டிரஸ்ட் என்ற காப்பத்தில் 23 சிறுவர்கள், 10 சிறுமிகள் உள்ளனர். சிறுவர் காப்பகத்துக்கு பண உதவி செய்யும் பிரிட்டனை சேர்ந்த பாதிரியார் ஜோனாதன்ராவின்சன் நடத்தி வந்தார். இவர் இந்தியா வரும் பொழுது இங்குள்ள மாணவர்களிடம் பாலீயல் ரீதியா தவறாக நடந்ததாகப் புகார். | குழந்தைகள் மீதான பாலியல் வன்முறை | தினமலர் |
| 2259. | 08.09.2011 | **சேலம் மாவட்டம்:** ஓமலூர் அருகே உள்ள பனங்காட்டைச் சேர்ந்த ஜெகதீஸ்வரன் மனைவி வனிதா(21). கணவன் மனைவி குடும்பத் தகராறில் ஆத்திரமடைந்த ஜெகதீஸ்வரன் பிறந்து 40 நாட்களுக்கும் ஆன ஆண்குழந்தையை அடித்துக் கொலை செய்ததாக புகார். | சிசுக்கள் மீதான வன்முறை & கொலை முயற்சி | தமிழ்முரசு |
| 2260. | 08.09.2011 | **திண்டுக்கல் மாவட்டம்:** திண்டுக்கல் பழைய செம்பட்டியைச் சேர்ந்த தஞ்சாவூர் ஆயுதப்படை காவலர்கள் மணிகண்டன். அயனாவரத்தைச் சேர்ந்த திவ்யா இருவரும் காதலித்தனர். திவ்யாவை திருமணம் செய்துக் கொள்வதாக ஆசை வாா்த்தை கூறி பாலியல். திவ்யா கர்ப்பம். மணிகண்டன் திருமனத்திற்கு மறுப்பதாக திவ்யா புகார். | பெண்கள் மீதான பாலியல் வன்முறை | தினமலர் |
| 2261. | 08.09.2011 | **நாமக்கல் மாவட்டம்:** ராசிபுரம் அருகே கட்டாணாச்சம்பட்டி 1 வது வார்டு அண்ணாநகர் காலனியைச் சேர்ந்த சங்கர் மனைவி சங்கீதா(22). மகன் ராகுல்(2). சங்கரின் அம்மா ஜெயம்மாளுக்கும் அதே பகுதியைச் சேர்ந்த சுப்பிரமணிக்கும் தொடர்பு. தனது கள்ளக்காதலுக்கு குழந்தை தடையாக இருப்பதாக நினைத்து சுப்பிரமணி குழந்தையைக் கொலை | குழந்தைகள் மீதான வன்முறை & கொலை | தினத்தந்தி |

மக்கள் கண்காணிப்பகம்

| | | | | |
|---|---|---|---|---|
| | | செய்ததாக புகார். சுப்பிரமணியன் கைது. | | |
| 2262. | 08.09.2011 | **சென்னை மாவட்டம்:** சென்னை தண்ணீர்குப்பத்தைச் சேர்ந்த சின்னத்துரை(25). மதுரையைச் சேர்ந்த மாலா என்ற மாரீஸ்வரிக்கும் திருமணம் நடைபெற இருந்த நேரத்தில் இரவு மாப்பிள்ளை தலைமறைவு. | பெண்கள் மீதான வன்முறை | தினகரன் |
| 2263. | 08.09.2011 | **மதுரை மாவட்டம்:** உசிலம்பட்டி அருகேயுள்ள பொக்குளிப்பட்டியைச் சுகபிரபு(24) அதே பகுதியைச் சேர்ந்த அன்னலெட்சுமி(22) இருவரும் காதலித்துத் திருமணம் செய்தனர். கூடுதல் வரதட்சணை கேட்டு கணவர் மற்றும் குடும்பத்தார் துன்புறுத்துவதாக அன்னலெட்சுமி புகார். | பெண்கள் மீதான வன்முறை & வரதட்சணைக் கொடுமை | தினகரன் |
| 2264. | 08.09.2011 | **மதுரை மாவட்டம்:** நாகமலை புதுக்கோட்டை தனியார் பள்ளியில் படிக்கும் மாணவர்கள் போதைப்பொருள் உபயோகிப்பதாக புகார். வடிவேல் கரையில் இருந்து பள்ளிக்கு வந்து படிக்கும் மாணவர்களை ஆசிரியர்கள் முழங்கால் போடச் செய்து மாணவர்களை சோதனை செய்ததால் மாணவர்களின் பெற்றோர் ஆசிரியர்களை கண்டித்து பள்ளியை முற்றுகை. | வகுப்பறை வன்முறை | தினகரன் |
| 2265. | 08.09.2011 | **நெல்லை மாவட்டம்:** விஜயநாராயணம் அருகே கைலாசநாதபுரம் கிராமத்தைச் சேர்ந்த சேர்மத்துரை(45) மகன் சுதர்சன்(5). விஜயநாராயணம் அருகே 200 அடி ஆழமுள்ள ஆழ்துறை கிணறு தோன்டப்பட்டு மூடப்படாமல் இருந்த நிலையில் ஆழ்துளை கிணற்றில் சுதர்சன் தவறிவிழுந்து மரணம். | குழந்தைகள் மீதான வன்முறை | தினகரன் |
| 2266. | 09.09.2011 | **சென்னை மாவட்டம்:** சென்னை அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்ந்த வசந்தி(34) மர்மமான முறையில் மாயம். வழக்கு பதிவு செய்து நடவடிக்கையும் எடுக்காமல் சென்னை மாநகராட்சி மற்றொரு நோயாளியை அந்த அறையில் அமர்த்தியுள்ளனர். | பெண்கள் மீதான வன்முறை | கலைஞர் டிவி |
| 2267. | 09.09.2011 | **கன்னியாகுமரி மாவட்டம்:** நாகர்கோவில் அருகே உள்ள மணிகட்டி பொட்டல் பகுதியைச் சேர்ந்த ராஜசேகரின் 17 வயது மகள். தனது மகளை வைராவிளை பகுதியைச் சேர்ந்த வாலிபர் கடத்திச் சென்றதாக புகார் கொடுத்தும் காவலர்கள் நடவடிக்கை எடுக்கவில்லை என எஸ்.பியிடம் புகார். | பெண்கள் மீதான வன்முறை & கடத்தல் & காவல் நிலையச் சித்திரவதை | தமிழ்சுடர் |
| 2268. | 09.09.2011 | **கன்னியாகுமரி மாவட்டம்:** ஆரல்வாய்மொழி குமாரபுரம் காலனி | பெண்கள் மீதான | தமிழ்சுடர் |

மக்கள் கண்காணிப்பகம்

| | | | | |
|---|---|---|---|---|
| | | பகுதியைச் சேர்ந்த கனகராஜ் மனைவி விஜலெட்சமி(26). கணவன் மனைவி குடும்பத் தகராறில் ஆத்திரமடைந்த கனகராஜ் விஜலெட்சுமி கழுத்தை நெறித்துக் கொலை செய்ததாக புகார். | வன்முறை & கொலை | |
| 2269. | 9.09.2011 | **தூத்துக்குடி மாவட்டம்:** தூத்துக்குடி முத்தையாபுரம் ராஜீவ் நகரைச் சேர்ந்த ஜேசுராஜ்(24) மனைவி நிர்மலா(33). ஜேசுராஜ் தினமும் குடித்துவிட்டு வந்து போதையில் அடிப்பதாக நிர்மலா புகார். | பெண்கள் மீதான வன்முறை | தமிழ்சுடர் |
| 2270. | 9.09.2011 | **திண்டுக்கல் மாவட்டம்:** பழனியை அருகே நெய்க்காரபட்டி கிராமத்தைச் சேர்ந்த கிருஷ்ணசாமி தனது நிலத்திற்கு மின் இணைப்பு கேட்டு கிராம நிர்வாக அலுவலர் துரைராஜ்(29)யை அணுகினார். அவர் ரூபாய் 2,500 லஞ்சம் கேட்டதாக கிருஷ்ணசாமி புகார். | லஞ்சம் | தினமணி |
| 2271. | 9.09.2011 | **மதுரை மாவட்டம்:** உசிலம்பட்டியைச் சேர்ந்த மொக்கராஜின் மகள் நித்யா(27). மதுரை ஜெய்ஹிந்த்புரம் பகுதியைச் சேர்ந்த சென்ராயன் தனது மகளைக் கடத்திச் சென்றதாக மொக்கராஜ் புகார். | பெண்கள் மீதான வன்முறை & கடத்தல் | தினத்தந்தி |
| 2272. | 9.09.2011 | **விழுப்புரம் மாவட்டம்:** உலக எழுத்தறிவு தினம் பல்வேறு இடங்களில் கொண்டாடப்பட்டது. பள்ளி மாணவ, மாணவிகளின் பேரணி நடைபெற்றது. விழுப்புரத்தில் இப்பேரணியை தொடக்கி வைக்க மணிமேகலை வருவதாக அறிவிப்பு. நீண்ட நேரமாக 200க்கும் மேற்பட்ட மாணவ, மாணவிகள் கலெக்டர் வருகைக்காக வெயிலில் காத்திருப்பு. | குழந்தைகள் மீதான வன்முறை & வகுப்பறை வன்முறை | தினகரன் |
| 2273. | 9.09.2011 | **மதுரை மாவட்டம்:** புதூர் ரேஸ்கோர்ஸ் காலனியைச் சேர்ந்த உதயசூரியன்(43) எஸ்.பி அலுவலகத்தில் உதவியாளராகப் பணிபுரிகிறார். உதயசூரியன் திருமங்கலம் அருகே நேசநேரியைச் சேர்ந்த வீரபத்திரன் மகன் சுரேஷ்குமார், மகள் முத்துப்பேச்சி, உறவினர்கள் தங்கராஜ், முனியாண்டி, முருகன், சரவணன், இவர்களுக்கு போலீஸ் வேலை வாங்கித் தருவதாக ரூ. 4லட்சத்து 85 ஆயிரம் மோசடி செய்ததாக உதயசூரியன் கைது. | காவல் நிலையச் சித்திரவதை | தினகரன் |
| 2274. | 9.09.2011 | **சேலம் மாவட்டம்:** ஒவ்வொரு நர்சரி பள்ளியும், மூன்றாண்டுக்கு ஒரு முறை, உதவி தொடக்கக் கல்வி அலுவலகம் மூலம், பள்ளிக்கான அங்கீகாரச் சான்றை பெற வேண்டும். சங்ககிரியில் உள்ள, பிரைட்சன் நர்சரி மற்றும் பிரைமரி பள்ளி தாளாளர் பூங்கோதை, அங்கீகாரச் சான்று வேண்டி | லஞ்சம் | தினமலர் |

மக்கள் கண்காணிப்பகம்

| | | | | |
|---|---|---|---|---|
| | | மழலையர் மற்றும் உதவி தொடக்கக் கல்வி அலுவலர் பாலு (எ) பாலசுப்பிரமணியனை அணுகினார். அவர் ரூபாய் 5,000 லஞ்சம் கேட்டதாக புகார். பாலு கைது. | | |

மக்கள் கண்காணிப்பகம்